# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

# விபரக் கொத்து Information Booklet


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 2 |
| போட்டிகளுக்கான பொது விதிமுறைகள் | 3 |
| இணைப்பு 1 – வயதுப் பிரிவுகள், போட்டிகளின் அட்டவணை | 10 |
| இணைப்பு 2 – விண்ணப்பப் படிவம் | 11 |
| இணைப்பு 3 – கவிதை மனனப் போட்டிக்கான விளக்கம் | 13 |
| இணைப்பு 4 – பேச்சுப் போட்டிக்கான விளக்கம் | 15 |
| இணைப்பு 5 – வாய்மொழித் தொடர்பாற்றல் பற்றிய விளக்கம் | 17 |
| இணைப்பு 6 – எழுத்தறிவுப் போட்டிக்கான விளக்கம் | 19 |
| இணைப்பு 7 – விவாதப் போட்டிக்கான விளக்கம் | 20 |
| இணைப்பு 8 – வினாடிவினா போட்டிக்கான விளக்கம் | 21 |
| இணைப்பு 9 – தனி நடிப்புக்கான விளக்கம் | 22 |
| இணைப்பு 10 – பல்திறன் போட்டிக்கான விளக்கம் | 23 |
| இணைப்பு 11 – கவிதை மனனப் போட்டிக்கான கவிதைகள் | 24 |
| இணைப்பு 12 – பேச்சுப் போட்டிக்கான விடயங்கள் | 28 |
| இணைப்பு 13 – போட்டிகளுக்கான பரிசு நன்கொடை வழங்கும் படிவம் | 31 |
| இணைப்பு 14 – போட்டிகள் பற்றிய உங்கள் கருத்தறியும் படிவம் | 32 |


**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சம்பந்தமான முக்கிய திகதிகள்:**

12 ஜூலை மாதம் 2010 – விண்ணப்ப முடிவு திகதி

14, 15, 21, 22 ஆகஸ்ட் 2010 – நியூசவுத் வேல்ஸ் மாநிலப் போட்டிகள் நடைபெறும்.

2 ஒக்டோபர் 2010 – சிட்னியில் தேசிய போட்டிகள் நடைபெறும்.

3 ஒக்டோபர் 2010 – சிட்னியில் பரிசளிப்பு விழா (நியூசவுத் வேல்ஸ் மாநிலம் + தேசிய போட்டிகள்)

## எம்முடன் தொடர்பு கொள்ள:


**முகவரி: இணைப்பாளர், தலைமையகம், தமிழ் ஊக்குவிப்புக் குழு**

Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140, Australia.

Email: asogt.tc@gmail.com Website: www.kalappai.org

**COORDINATORS:**

| | | |
|---|---|---|
| National Coodinator: | Mr. K. Narenthiranathan | **(07) 3161-7167** or **0402 026 922** |
| Sydney: | Mr. A. Nimalendran | **(02) 8824-3051** or **0419 255 625** |
| Melbourne: | Mrs. A. Yaso | **(03) 9449-7887** |
| Canberra: | Dr. K. Jeyasingham | **(02) 6293-1469** or **0411 106 944** |
| Adelaide: | Mr. Raj Srithar | **(08) 8337 4706** or **0406 628 634** |
| Queensland: | Dr. J. Senthilvasan | **(07) 3300 0848** or **0401 370 572** |
| Auckland (NZ) | Mr. A. Yogakumar | **(649) 271-4508** |
| Wellington (NZ) | Mr. M. Ramesh | **(644) 568-4235** |

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2010

16 ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ், கன்பரா மாநிலங்களில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. 10 வது ஆண்டிலிருந்து **அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின்** தலைமையின் கீழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள் **"புதியதோர் உலகம் செய்வோம்"** என்பதாகும். தாயகங்களிலும் புலம் பெயர் தேசங்களிலும் எம்மவர் இன்னல்கள் நீங்க, நம்பிக்கை தரும் வகையில் புதியதோர் உலகம் செய்யவோண்டிய தேவை உள்ளது என்ற கருத்தை மையமாக வைத்தே இந்த ஆண்டிற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலும் மற்றைய அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாநிலங்களிலும் நாடாத்தப்படவிருக்கின்றன. எழுத்தறிவுப் போட்டிகளுடன் பேச்சுப்போட்டிகளும், கவிதை மனனப் போட்டிகளும் (குறிப்பிட்ட பிரிவுகளில் மட்டும்) அவுஸ்திரேலிய-நியூசிலாந்து மட்டத்தில் தேசியப் போட்டிகளாக நடாத்தப்பட இருக்கின்றன. இப்போட்டிகள் முதலில் மாநில மட்டத்தில் நடாத்தப்பட்டுப் பின்னர் தேசிய மட்டத்தில் நடைபெறும். மாநிலப் போட்டிகளுக்கும், தேசிய மட்டத்திலான போட்டிகளுக்கும் வேறுவேறாகப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் நடைபெறும் 10 போட்டிகளுக்கும் **தங்கப்பதக்கங்கள்** முதற் பரிசாக வழங்கப்படும்.

சில முக்கியமான மாற்றங்களை இங்கு தருகின்றோம்:

1) **போட்டியாளர்கள் தங்கள் பிரிவில் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி போட்டியாளரின் பிரிவில் நடைபெறாதவிடத்து போட்டியாளர் மேற் பிரிவில் நடைபெறும் அப் போட்டியில் பங்குபற்றலாம்.**
2) **மேற் பிரிவு: 10-11 வயது, அதிமேற் பிரிவிற்கான வயது எல்லை 12 - 14 வயது ஆகும். இளைஞர் பிரிவிற்கான வயது எல்லை 15 - 17 வயது ஆகும்.**
3) **போட்டிகளிற்கான விண்ணப்பக் கட்டணமான $5 உடன் ஒவ்வொரு போட்டிக்கான கட்டணமாக தலா $5 அறவிடப்படும்.**

ஆண்டுதோறும் உங்களிடமிருந்து எமக்குக் கிடைக்கின்ற கருத்துக்களைக் கொண்டு, இப்படியான சில மாற்றங்கள் செய்யப்படுவதனால், எமது போட்டிகளுக்கான விதிமுறைகளைக் கவனமாக வாசித்து அறியவும். அதன் பின்னரே நீங்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். எமது போட்டிகளுக்கான விதிமுறைகளும் மற்றைய விபரங்களும் இந்த விபரக் கொத்தில் அடங்கியுள்ளன. இவற்றை தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது எமது இணையத் தளத்திலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். போட்டிக்கான விண்ணப்பப் படிவம் 2 பக்கங்களைக் கொண்டுள்ளது. தமிழ்ப்பாடசாலையூடாக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பப் படிவம் அவர்களின் பாடசாலையின் பிரதிநிதியால் சரிபார்க்கப்பட்டு விபரங்கள் உறுதி செய்யப்படவேண்டும். தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தேவையான அத்தாட்சிப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்திற்கு எடுத்து வரவேண்டும்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் எமது சங்கத்தின் இணையத் தளமான www.kalappai.org இல் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது போட்டிகளில் மாநில, தேசிய மட்டங்களில் பங்குபற்றி உங்கள் திறமைகளைக் காண்பித்து பரிசுகளை வென்றெடுக்க எமது நல் வாழ்த்துக்கள்!

**திரு. க. நரேந்திரநாதன்**
**இணைப்பாளர்,**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2010.**

# "புதியதோர் உலகம் செய்வோம்"

**(இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள்)**

எமது தாயகங்களில் அரசியல் பொருளாதார சமூதாய அழுத்தங்களால் பல்லாண்டு காலமாக எம் தாயக உறவுகள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகிவருகின்றார்கள். நாம் வாழுகின்ற உலகம் சூழல் மாசுபடுதல், பூமியின் வெப்பநிலை உயருதல், சனத்தொகை அதிகரித்தல் போன்ற பல்வேறு காரணிகளால் அபாயங்களை எதிர்நோக்குகின்றது. எம் எதிர்கால சந்ததி இச்சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. புலம் பெயர்ந்து பல்வேறு தேசங்களில் வாழ்கின்ற எம்மவர்கள் தங்கள் அடையாளங்களைப் பேணிப்பாதுகாக்கக் கடுமையாக முயற்சிக்கின்றார்கள். இந்த இன்னல்கள் எல்லாம் நீங்கி இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு நம்பிக்கை தரும் வகையில் புதியதோர் உலகம் செய்யவோண்டிய தேவை உள்ளது என்ற கருத்தை மையமாக வைத்தே இந்த ஆண்டிற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

### பிரதான குறிக்கோள்

தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடத்தப்படுவதன் பிரதான குறிக்கோள்: அவுஸ்ரேலியாவிலும் நியூசிலாந்திலும் தமிழ்மொழியையும், தமிழ்க் கலாசாரத்தையும் பல தலைமுறைகளுக்குப் பேணி வளர்ப்பதாகும்.

### நோக்கம்

தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் (குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில்) வாழ்கின்ற தமிழ்ச் சிறார்கள் தமிழ் கற்பதைத் தொடர்ந்து ஊக்குவிப்பதும், அவர்களிடையே தமிழ்மொழி, தமிழ்க் கலாசாரம் ஆகியனவற்றில் ஆர்வத்தினையும், பற்றினையும், ஈடுபாட்டினையும் ஏற்படுத்துவதுடன், இங்குள்ள தமிழ் இளைஞர்களிடையே நல்லதொரு தலைமைத்துவத்தை உருவாக்குவதும் எமது நோக்கங்களாகும்.

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2010
## பங்குபற்றுவதற்கான தகுதிகளும் பொது விதிமுறைகளும்

**1.0 போட்டிகளுக்கான பொது விபரங்கள்:**

1.1 இந்தத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் வாழுகின்ற தமிழ்ச் சிறார்களும் இளைஞர்களும் பங்குபற்றலாம்.

1.2 தமிழ்க் கல்வி நிலையங்களில் தமிழ் கற்கும் மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தமது விண்ணப்பங்களை அவர்களின் தமிழ்க் கல்வி நிலையங்களுக்கூடாக அனுப்புவது விரும்பத்தக்கது.

1.3 தமிழ்க் கல்வி நிலையங்களைச் சாராத மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1.4 நியூசவுத் வேல்ஸ் மாநிலப் போட்டிகள் 14, 15, 21, 22 ஆகஸ்ட் 2010 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

**2.0 வயதுப் பிரிவுகள்:**

2.1 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட தமிழ்ச் சிறார்களும் இளைஞர்களும் ஏழு (வயதுப்) பிரிவுகளில் எட்டு விதமான போட்டிகளில் பங்குபற்றலாம்.

2.2 போட்டியாளரின் வயது 01-07-2010 அன்று உள்ளபடி கணிக்கப்படும்.

2.3 இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும் போட்டி வகைகளும் இணைப்பு-1 இல் தரப்பட்டுள்ளன.

2.4 **போட்டியாளர்கள் தங்கள் பிரிவில் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி போட்டியாளரின் பிரிவில் நடை பெறாதவிடத்து போட்டியாளர் தமது வயதுப் பிரிவிலும் கூடிய வயதுப் பிரிவில் நடைபெறும் அப் போட்டியில் பங்குபற்றலாம்.**

2.5 எழுத்தறிவுப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளில் குறித்த வயதுப்பிரிவில் பதினைந்திற்கும் மேற்பட்ட ஆண்களோ அல்லது பெண்களோ தோற்றும் பட்சத்தில், அந்தப் போட்டி ஆண் - பெண் என இரு பிரிவுகளில் நடாத்தப்படும். இப்படி ஆண்-பெண் பிரிவிலான போட்டிகள் நடைபெறுவது போட்டி நாள் அன்றோ அல்லது இயலுமானால் முன்கூட்டியோ அறிவிக்கப்படும்.

## 3.0 போட்டிகளின் வகைகள்:

3.1 தனியொருவர் கலந்து கொள்ளும் **சாதாரண பிரிவுக்கான போட்டிகள்**:
கவிதை மனனப் போட்டி, பேச்சுப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி, எழுத்தறிவுப் போட்டி.

3.2 தனியொருவர் கலந்து கொள்ளும் **விசேட பிரிவிற்கான போட்டிகள்**:
8 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட எழுத்தறிவுப் போட்டி.
12 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட தனி நடிப்புப் போட்டி.
12 - 17 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட தனி நடிப்புப் போட்டி.
15 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்).
18 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட எழுத்தறிவுப் போட்டி.

3.3 **குழுநிலையில் நடைபெறும் போட்டிகள்**:
விவாதப் போட்டி, வினாடி வினாப் போட்டி, பல்திறன் போட்டி.

3.4 மேற்குறிப்பிட்ட போட்டி வகைகளில் சில போட்டிகளே அந்தந்த வயதுப் பிரிவில் நடாத்தப்பட இருப்பதனால், தயவு செய்து **இணைப்பு-1** ஐப் பார்க்கவும்.

3.5 வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் 2009ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்தப் பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையவராகார்.

3.6 மாநில நிலையில் நடைபெற்ற 2009ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை மனனப் போட்டிகளில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் தேசிய நிலையில் நடைபெறாத கவிதை மனனப் போட்டி ஒன்றில் மீண்டும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3.7 2009ம் ஆண்டு தேசிய நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதற்பரிசை (அதாவது தங்கப் பதக்கம்) பெற்றவர்கள் இந்த ஆண்டு அதே **போட்டியில் மாநில, தேசிய நிலைகளில் எந்தப்பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையவராகார்.** அவை தவிர்ந்த, தத்தமது வயதுப் பிரிவிற்குரிய வேறு போட்டிகளில் பங்குபற்றலாம். 2009ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற கவிதை மனனப் போட்டியிலோ, பேச்சுப் போட்டியிலோ அல்லது எழுத்தறிவுப் போட்டியிலோ முதற்பரிசு பெற்று, தேசியநிலையில் தங்கப்பதக்கம் பெறாதவர்கள் மீண்டும் இவ்வருடம் அதே போட்டியில் மாநில நிலையிலேயோ அல்லது தேசிய நிலையில் அதே வகைப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

3.8 **போட்டிகள் பற்றிய விளக்கம்:** கவிதை மனனப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி, எழுத்தறிவுப் போட்டி, பேச்சுப் போட்டி, விவாதப் போட்டி, வினாடிவினா, தனிநடிப்பு, பல்திறன் போன்ற போட்டிகளில் நாம் எதிர்பார்க்கும் திறமைகள், மதிப்பீடு செய்யும் முறை என்பன பற்றிய விளக்கம் வழங்கப்பட்டுள்ளன (இணைப்பு 2 – 11ஐப் பார்க்கவும்). அந்த வகையில் நடுவர்களின் மதிப்பீடு அமைந்திருக்கும். இந்தப் போட்டிகள் பற்றிய மேலதிக விளக்கங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

3.9 கடந்த வருடங்களில் நடைபெற்ற எழுத்தறிவுப் போட்டிகளின் வினாத்தாள்களை எமது இணையத்தளத்திலிருந்து (www.kalappai.org) பெற்றுக் கொள்ளலாம்.

**4.0 வயதுப் பிரிவுகளும் போட்டிகளும்:** **இணைப்பு 1** ஐப் பார்க்கவும்

**4.1 பாலர் பிரிவு:** 5 வயதிற்குட்பட்டோர் (01.07.2005 க்குப்பின் பிறந்தோர்)

- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி

**4.2 ஆரம்பப் பிரிவு:** 5 வயதுடையோர் (01.07.2004 இற்கும் 30.06.2005 இற்கும் இடையில் பிறந்தோர்)

- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி

**4.3 கீழ்ப் பிரிவு:** 6-7 வயதுடையோர் (01.07.2002 இற்கும் 30.06.2004 இற்கும் இடையில் பிறந்தோர்)

- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- எழுத்தறிவுப் போட்டி – விசேட போட்டி (8 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)

**4.4 மத்திய பிரிவு:** 8-9 வயதுடையோர் (01.07.2000 இற்கும் 30.06.2002 இற்கும் இடையில் பிறந்தோர்)

- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- தனி நடிப்பு – விசேட போட்டி (13 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)

**4.5 மேற்பிரிவு:** 10-11 வயதுடையோர் (01.07.1998 இற்கும் 30.06.2000 இற்கும் இடையில் பிறந்தோர்)

- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – விசேட போட்டி (15 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)
- தனி நடிப்பு – விசேட போட்டி (12 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)

**4.6 அதிமேற்பிரிவு:** 12-14 வயதுடையோர் (01.07.1995 இற்கும் 30.06.1998 இற்கும் இடையில் பிறந்தோர்.

- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – விசேட போட்டி (15 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)
- விவாதப் போட்டி – குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர் பிரிவில்)
- தனி நடிப்பு – விசேட போட்டி (12 -17 வயதுப் பிரிவில்)
- வினாடி வினாப் போட்டி – குழுநிலைப் போட்டி (15 வயதிற்குட்பட்டோர்)

- பல்திறன் போட்டி – விசேட குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)

**4.7 இளைஞர் பிரிவு:** 15-17 வயதுடையோர் (01.07.1992 இற்கும் 30.06.1995 இற்கும் இடையில் பிறந்தோர்).

- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- எழுத்தறிவுப் போட்டி – விசேட போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)
- விவாதப் போட்டி – குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)
- தனி நடிப்பு – விசேட போட்டி (12 -17 வயதுப் பிரிவில்)
- வினாடி வினாப் போட்டி – குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)
- பல்திறன் போட்டி – விசேட குழுநிலைப் போட்டி (18 வயதிற்குட்பட்டோர்)

4.8 போட்டிகளுக்கான விளக்கங்களும், பொது விடயங்களும், இணைப்பு 3-10 இல் வழங்கப்பட்டுள்ளன. கவிதை மனனப் போட்டிக்கான கவிதைகளும், பேச்சுப் போட்டிக்கான பேச்சுக்களும் இணைப்பு 11-12 இல் வழங்கப்பட்டுள்ளன.

## 5.0 அண்மையில் அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் குடியேறிய போட்டியாளர்கள்:

5.1 நீங்கள் கடந்த சில ஆண்டுகளுக்குள், இலங்கையில் அல்லது இந்தியாவில் (தமிழ் முதல் மொழி) இருந்து வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்தவராக இருந்தால் (அவுஸ்திரேலியா நியூசிலாந்து உட்பட) **அல்லது** இலங்கை, இந்தியா தவிர்ந்த வேறு நாடுகளில் (அவுஸ்திரேலியா நியூசிலாந்து உட்பட) பிறந்து பின் இலங்கையில் அல்லது இந்தியாவில் வசித்திருந்தால்;

**பாலர் பிரிவு:** 5 வயதிற்குட்பட்டோர் (01.07.2005 க்குப்பின் பிறந்தோர்) – புலம்பெயர்ந்து கடந்த 1 வருடமாவது அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் அல்லது பிறநாடுகளில் (இலங்கை, இந்தியா தவிர்ந்த) வசித்து இருந்தால் மட்டுமே சாதாரண பிரிவுகளுக்கென நடைபெறும் தனிப்பட்ட போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும்.

**ஆரம்பப் பிரிவு:** 5 வயதுடையோர் (01.07.2004 இற்கும் 30.06.2005 இற்கும் இடையில் பிறந்தோர்) – புலம்பெயர்ந்து கடந்த 2 வருடமாவது அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் அல்லது பிறநாடுகளில் (இலங்கை, இந்தியா தவிர்ந்த) வசித்து இருந்தால் மட்டுமே சாதாரண பிரிவுகளுக்கென நடைபெறும் தனிப்பட்ட போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும்.

**ஏனைய பிரிவினர்:** 6-17 வயதுடையோர் (01.07.1992 இற்கும் 30.06.2004 இற்கும் இடையில் பிறந்தோர்) – புலம்பெயர்ந்து கடந்த 3 வருடமாவது அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் அல்லது பிறநாடுகளில் (இலங்கை, இந்தியா தவிர்ந்த) வசித்து இருந்தால் மட்டுமே சாதாரண பிரிவுகளுக்கென நடைபெறும் தனிப்பட்ட போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும்.

5.2 மேலே 5.1 இல் குறிப்பிட்ட விதிக்களுக்கமைய நீங்கள் சாதாரண போட்டிகளில் பங்குபற்றத் தகுதியற்றவரானால் நீங்கள் உங்கள் பிரிவில் நடைபெறும் விசேட போட்டிகளிலேயே பங்குபற்றலாம் (தயவு செய்து 3.2ஐப் பார்க்கவும்). உங்களது தகைமையைச் சரிபார்த்துக் கொள்ள இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

5.3 போட்டியாளார்கள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் குடியேறிய நாள் 01-07-2010 இல் உள்ளபடி கணிக்கப்படும்.

## 6.0 விண்ணப்ப விதிகள்:

6.1 தமிழ்ப் பாடசாலைகள் ஊடாக விண்ணப்பிக்கும் போட்டியாளர்களின் விண்ணப்பப் படிவங்கள் அவர்கள் படிககும் தமிழ்ப் பாடசாலைப் பிரதிநிதியால் உறுதி செய்யப்படல் வேண்டும். போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகளில்

குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சி (கடவுச் சீட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்) தேவைப்படின் காண்பிக்கப்பட வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப் பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.

6.2 தமிழ்ப் பாடசாலைகள் ஊடாக விண்ணப்பிக்காத போட்டியாளர்கள் தமது வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகளில் குடியேறிய வருடம் என்பன பற்றிய அத்தாட்சிகளை (கடவுச் சீட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்) எமது விளக்கப் பட்டறை அன்றோ அல்லது போட்டிக்கு **1 மணி நேரத்திற்கு முன்னதாகவோ** போட்டிக்கான பொறுப்பாளரிடம் காண்பிக்க வேண்டும். இந்த அத்தாட்சி எமக்குக் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த விபரங்கள் எமக்குக் கிடைக்கப் பெறும் சந்தர்ப்பத்தில் அவை இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.

6.3 2009 ஆம் ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் இவ்வருடம் தத்தமது போட்டி நடைபெறும் தினத்தன்றோ அல்லது முன்னராகவோ கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2010ம் ஆண்டுப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

6.4 விண்ணப்பித்த போட்டியாளர்கள் போட்டி நடைபெறுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வந்து தங்கள் பெயர்களை பொறுப்பாளர்களிடம் பதிவு செய்தல் வேண்டும். பதிவுசெய்த போட்டியாளர்கள் மாத்திரமே போட்டியில் பங்குபற்ற முடியும். போட்டி ஆரம்பித்த பின்னர் போட்டியாளர்கள் எவரும் போட்டிக்குப் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6.5 இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் **12-07-2010** இற்கு முன்னர் Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140, Australia என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

6.6 போட்டி நடைபெறும் இடம் நேரம் ஆகிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 7.0 போட்டி நடைமுறைகள்:

7.1 மேடைப் போட்டிகளின்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் பார்வையாளர் எவரேனும் போட்டி நடைபெறும்போது போட்டியாளருக்கு எந்தவகையிலும் உதவிசெய்தல் ஆகாது.

7.2 எழுத்தறிவுப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளில் குறித்த வயதுப்பிரிவில் பதினைந்திற்கும் மேற்பட்ட ஆண்களோ அல்லது பெண்களோ தோற்றும் பட்சத்தில், அந்தப் போட்டி ஆண் - பெண் என இரு பிரிவுகளில் நடாத்தப்படும். போட்டியாளர்கள் போட்டியில் பங்குபற்றும் வரிசைக்கிரமம் சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

7.3 போட்டிகள் நடைபெறும் போது கையடக்கத் (நடமாடும்) தொலைபேசிப் பிரயோகம் தடைசெய்யப்பட்டுள்ளது. பெற்றோர் தத்தமது பிள்ளைகளின் போட்டியின் போது மட்டும் புகைப்படம், வீடியோ (ஒளிப்படம்) எடுக்கலாம், ஆனால் ஏனைய போட்டியாளர்களைப் புகைப்படம், வீடியோ ஒளிப்படம் எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

## 8.0 பெறுபேறுகளும் பரிசுகளும்:

8.1 போட்டியின் பெறுபேறு பற்றி நடுவர்களின் தீர்ப்பே முடிவானதாகும். இந்தப் பெறுபேறுகள் எமது பரீட்சைச் சபையினாற் சரிபார்த்தபின் இயலுமானவரை போட்டிநாள் அன்றே போட்டி மண்டபத்திற்கு வெயியேயுள்ள விளம்பரப் பலகையில் வெளியிடப்படும். எழுத்துப் பரீட்சைக்கான பெறுபேறுகள் கடிதம் அல்லது மின்னஞ்சல் (email) மூலம் அறிவிக்கப்படும். போட்டிகள் நடைபெற்று ஒரு வாரத்துக்குள் போட்டிகளின் முடிவுகள் எமது இணையத்தளத்தில் (www.kalappai.org) வெளியிடப்படும்.

8.2 8 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கு -

ஒவ்வொரு போட்டியிலும் மிகச் சிறப்பாகத் தேர்ச்சியடையும் போட்டியாளருக்கு வெற்றிக் கேடயம் பரிசாக வழங்கப்படும். இந்தப் போட்டியாளர்களுக்கு முதலாம் பிரிவு, இரண்டாம் பிரிவு, சாதாரண பிரிவு என்ற வகையில் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பரிசு பெறத்தவறியவர்களுக்கு பங்குபற்றியதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

8.3 8 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கு - 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளுடன், முதலாம் பிரிவில் வருவோருக்கு ஆறுதல் பரிசுகளும், வழங்கப்படும். போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் (முதலாம், இரண்டாம், சாதாரண பிரிவு எனவும் ஏனையோருக்குப் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும்) வழங்கப்படும்.

8.4 வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கான பரிசில்கள் **அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் பரிசளிப்பு விழாவில்** வழங்கப்படும். மேடைப் போட்டிகளில் **80%** புள்ளிகளுக்கு மேல் பெற்று, முதலாவது இடத்தைப்பெற்ற திறமைமிக்க வெற்றியாளர்கள் மட்டும் மேடையில் தோன்றித் தமது திறமையை வெளிப்படுத்த அனுமதிக்கப்படுவார்கள். இதில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிக் குழுவின் முடிவே இறுதியானது.

8.5 நீங்கள் கேட்குமிடத்து, எழுத்தறிவுப் போட்டியிற் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கு அவர்களது தகைமை பற்றிய விபரங்கள் அடங்கிய சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

**9.0 போட்டிக்கான அனுமதிக் கட்டணம்:**

9.1 இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களையும் மற்றும் பரிசுகளையும் நலன்விரும்பிகள் பலரும், தமிழ் நிறுவனங்களும் வழங்கிய போதிலும் போட்டி ஒழுங்குகளுக்கான செலவுகளின் ஒரு பகுதியை ஈடு செய்வதுடன் போட்டிகளைத் தொடர்ந்து எதிர்வரும் வருடங்களிலும் நடாத்துவதற்காகவும் மேலதிக நிதி தேவைப்படுகின்றது. இதற்காகப் பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியாளாரிடமும் விண்ணப்பக் கட்டணமாக **$5.00** உடன் ஒவ்வொரு போட்டிக்கும் தலா **$5.00** கட்டணமாக அறவிடப்படும்.

9.2 போட்டியாளர்கள் தாம் பங்குகொள்ளுகின்ற அனைத்துப் போட்டிகளுக்குமான மொத்தக் கட்டணத்தையும் ஒரே முறையில் செலுத்த வேண்டும். கட்டணங்களை பிரித்துச் செலுத்த எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9.3 போட்டிக்கான பூர்த்தி செய்த உங்கள் விண்ணப்பப் படிவங்களை அதற்குரிய காசோலையுடன் (in favour of `Tamil Competitions') Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140, Australia என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது உங்கள் பாடசாலைப் பிரதிநிதியிடம் கையளிக்கலாம் அல்லது போட்டி நடைபெறும் தினத்தன்று நீங்கள் இக்கட்டணத்தைச் செலுத்தலாம்.

**10.0 மாநிலப் போட்டிகள்:**

10.1 தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் அவுஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும் பல மாநிலங்களில் நடைபெறுகின்றன. இப் போட்டிகளில் மாநிலநிலையிற் பங்குபற்ற அந்தந்த இணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

10.2 போட்டியாளர் ஒவ்வொருவரும் அவர்கள் வசிக்கும் மாநிலப் போட்டிகளில் கலந்து கொண்டு பின்னர் தேசியப் போட்டிகளுக்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெறுவர்.

10.3 தெரிவு செய்யப்பட்ட போட்டிகள் மட்டுமே ஒவ்வொரு மாநிலத்திலும் நடைபெறுவதனால், உங்கள் மாநிலத்திற்கான போட்டியின் உபகுழுவுடனோ, மாநில இணைப்பாளருடனோ அல்லது எமது பிரதிநிதியுடனோ தொடர்பு கொள்ளலாம்.

10.4 போட்டிக்கு விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கு அந்த மாநிலப் போட்டிகளின் நேர அட்டவணை அனுப்பி வைக்கப்படும்.

**11.0 தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகள்:**

11.1 அனைத்து எழுத்தறிவுப் போட்டிகளும், பேச்சுப் போட்டிகளும், கவிதை மனனப் போட்டிகளும் மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநிலங்களிற் பங்கு கொள்ளும் மாணவர்களின் தொகையே இதனைத் தீர்மானிக்கும். ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் போட்டியாளர்கள் மட்டும் தேசியப் போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள். மாநிலப் போட்டிகள் முடிந்த நிலையில் எத்தனை பேர் எந்தெந்தப் பிரிவிற்கான போட்டிகளிற் தேசிய மட்டத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என்பதனை அறியத் தருவோம்.

11.2 தேசியநிலையில் நடைபெறும் கவிதை மனனப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் சனிக்கிழமை, 2ம் திகதி ஒக்டோபர் மாதம் 2010 இல் சிட்னியில் நடைபெறும். தேசியநிலைப் போட்டிக்கென சிட்னி வரும் மாணவர்களுக்கு அவர்கள் தங்கவேண்டிய காலத்திற்கு இடவசதி வழங்க முயற்சிப்போம். சிட்னியில் தேசிய போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தேசிய தமிழ் வானொலிகளிலும், தொலைக்காட்சியிலும் அவர்கள் பங்குபற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

11.3 தேசிய மட்டத்தில் முதற் பரிசு பெறும் போட்டியாளருக்குத் தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும். தேசிய மட்டத்தில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 3ம் திகதி சிட்னியில் நடைபெறும் எமது பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும்.

## 12.0 பரீட்சை சபை:

12.1 கடந்த சில வருடங்களாக நாம் பரீட்சை சபை ஒன்றை நியமித்துள்ளோம். அதில் 5 தமிழ்ப் பெரியார்கள் அங்கம் வகிக்கின்றனர்.

12.2 பரீட்சை சபையினர் இந்தப் போட்டிகளைக் கண்காணித்து நிர்வாகக் குழுவிற்குப் பரிந்துரைகள் வழங்குவார்கள். அத்துடன் அவர்கள் பெறுபேறுகளை ஆராய்ந்து சரியாகப் பரிசுகள் வழங்கப்படுவதையம் உறுதி செய்வார்கள்.

## 13.0 போட்டிகள் பற்றிய உங்கள் கருத்துக்கள்:

**13.1** போட்டிகள் சம்பந்தப்பட்ட உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை வரவேற்கின்றேம். உங்கள் கருத்துக்கள் எமது போட்டிகளை மேலும் சிறப்படைய உதவியாக இருந்திருக்கின்றன, எதிர்காலத்திலும் இருக்கும் என்று நம்புகின்றோம்.

**13.2** உங்கள் கருத்துகளை எமக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துங்கள். உங்கள் கருத்துகள் உரிய நேரத்தில் பரீட்சைக் குழுவினால் பரிசீலிக்கப்படும்.

**13.3** முறைப்பாடுகள் இருப்பின், அவற்றைப் போட்டிகளின் இணைப்பாளரிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இணைப்பாளரின் பதிலிலோ அல்லது அவர் அளித்த விளக்கத்திலோ திருப்தி இல்லாதவிடத்து, அவற்றை எழுத்து மூலம் பரீட்சைச் சபைக்கு விண்ணபிக்கலாம். முறைப்பாடு கிடைக்கப்பெற்று 2 கிழமைகளுக்குள் பரீட்சைச் சபையினர் அந்த முறைப்பாட்டிற்கான பதிலை எழுத்து மூலம் தெரிவிப்பார்கள்.

## 14.0 போட்டிகளின் நேர அட்டவணை:

போட்டிகளுக்கான நேர அட்டவணை இங்கு கொடுக்கப்படவில்லை. எத்தனை மாணவர்கள் ஒவ்வொரு போட்டியிலும் தோற்றுகிறார்கள் என்ற விபரம் கிடைக்கப் பெற்ற பின்னரே அதாவது விண்ணப்ப முடிவு திகதியின் பின்னரே போட்டிகளுகான நேர அட்டவணை மின்னஞ்சல் முகவரி தந்த விண்ணப்பதாரர்களுக்கும், தமிழ்ப் பாடசாலைகளுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். இந்தப் போட்டிகளுக்கான நேர அட்டவணையை எமது இணையத்தளத்தில் இருந்தும் (www.kalappai.org) பெற்றுக் கொள்ளலாம். போட்டிகளுக்கான நேர அட்டவணையை 8ம் திகதி ஆகஸ்ட் மாதமளவில் பெறத் தவறியோர் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். போட்டிகளுக்கு முன்னர் இந்த நேர அட்டவணையைத் தெரிந்திருப்பது உங்கள் பொறுப்பு ஆகும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு-1**

## போட்டிகளும் வயதுப் பிரிவுகளும்

| போட்டி | சாதாரண போட்டிகள் | பிரிவு | வயது | பிறந்த திகதி |
|---|---|---|---|---|
| PP | கவிதை மனனப் போட்டி | பாலர் பிரிவு | 5 வயதின் கீழ் | 01.07.2005 க்குப்பின் |
| BP | கவிதை மனனப் போட்டி | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2004 - 30.06.2005 |
| BV | வாய்மொழித் தொடர்பாற்றல் | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2004 - 30.06.2005 |
| LP | கவிதை மனனப் போட்டி | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2002 - 30.06.2004 |
| LV | வாய்மொழித் தொடர்பாற்றல் | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2002 - 30.06.2004 |
| IV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| IW | எழுத்தறிவுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| IS | பேச்சுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| SV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| SW | எழுத்தறிவுப் போட்டி | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| SS | பேச்சுப் போட்டி | மேற்பிரிவு | 10-11 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| AdSW | எழுத்தறிவுப் போட்டி | அதிமேற்பிரிவு | 12-14 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| AdSV | வாய்மொழித் தொடர்பாற்றல் | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| AdSS | பேச்சுப் போட்டி | அதிமேற் பிரிவு | 12-14 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| YV | வாய்மொழித் தொடர்பாற்றல் | இளைஞர் பிரிவு | 15-17 வயது | 01.07.1992 - 30.06.1995 |

### விசேட போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| SpLW | விசேட எழுத்தறிவுப் போட்டி | கீழ்ப் பிரிவு | 8 வயதின் கீழ் | 30.06.2002 க்குப்பின் |
| SpAdSP | விசேட கவிதைமனனப் போட்டி | அதிமேற்பிரிவு | 15 வயதின் கீழ் | 30.06.1995 க்குப்பின் |
| SpSA | தனிநடிப்பு | மேற் பிரிவு | 12 வயதின் கீழ் | 30.06.1998 க்குப்பின் |
| SpYA | தனிநடிப்பு | இளைஞர் பிரிவு | 12-17 வயது | 01.07.1992 - 30.06.1998 |
| SpYW | விசேட எழுத்தறிவுப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |

### குழுநிலைப் போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| AdSQ | வினாடி வினாப் போட்டி | அதிமேற் பிரிவு | 15 வயதின் கீழ் | 30.06.1995 க்குப்பின் |
| YQ | வினாடி வினாப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |
| YD | விவாதப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |
| YT | பல்திறன் போட்டி | இளைஞர் பிரிவு | 18 வயதின் கீழ் | 30.06.1992 க்குப்பின் |

**குறிப்பு:** இங்கு நிழல்ப்படுத்தப்பட்ட போட்டிகள் அனைத்தும் தேசிய நிலையிலும் போட்டியாக நடாத்தப்படும். ஒவ்வொரு மாநிலத்திலும் மேலுள்ள அட்டவணையிலிருந்து போட்டிகள் தெரிந்தெடுக்கப்பட்டு நடாத்தப்படும். எனவே எல்லாப் போட்டிகளும் எல்லா மாநிலங்களிலும் நடாத்தப்படும் சாத்தியம் இருக்காது. தேசிய நிலைப் போட்டிகள் எல்லா மாநிலங்களிலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு-2**

## <u>விண்ணப்பப் படிவம் APPLICATION FORM</u>

**குடும்பப் பெயர்:** ……………………………….. Family Name:…………………………………(in English)

**முதற் பெயர்:** …………………………………….First Name:…………………………………..(in English)

**பிறந்த திகதி**: …………………………………… **பிறந்த நாடு**:……………………………….

**முகவரி**:…………………………………………………………………………………………

**மின் அஞ்சல் முகவரி**:………………………………………………………………….....

**தொலைபேசி:** ……………………………….**கையடக்கத் தொலைபேசி**:……………………

அவுஸ்திரேவியாவில் அல்லது நியூசிலாந்தில் பிறக்காதவராயின் நீங்கள் குடிபெயர்ந்த

திகதி: ……………………………

**நீங்கள் கற்கும் தமிழ்ப் பாடசாலை**:……………………………………………………………....

**2010 இல் பங்குபற்றும் போட்டி/போட்டிகள்:**

| சாதாரண போட்டிகள் | விசேட போட்டிகள் | குழுநிலைப் போட்டிகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

செலுத்த வேண்டிய கட்டணம்: $5.00 + (போட்டிகளின் எண்ணிக்கை) ….. x $5.00 = ……………

எமது போட்டி விதிமுறைகள் அனைத்தையும் வாசித்து விளங்கிக் கொண்டேன் என்றும், அந்த விதிமுறைகளுக்கு இணங்கி இந்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்கின்றேன் என்றும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் போட்டி விதிகளுக்கிணங்க, எனது விண்ணப்பப் படிவம் சரியான விபரங்களைக் கொண்டுள்ளதெனவும் உறுதி செய்கின்றேன். இந்த விபரம், அல்லது விபரங்கள் பிழையென அறியவரும் வேளையில் நான் போட்டியிலிருந்து விலக்கப்படலாம் என்பதையும் அறிவேன்.

________________________ __________________

கையொப்பம் (பங்குபற்றுபவர் / பெற்றோர்) திகதி

மேற்குறிப்பிட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

________________________ __________________

ஆசிரியர் / அதிபரின் கையொப்பம் திகதி

## பொது விதிமுறைகள் - தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2010

1) போட்டியாளரின் வயது 01-07-2010 இல் உள்ளபடி கணிக்கப்படும்.
2) இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும், போட்டி வகைகளும் தரப்பட்டுள்ளன.
3) **போட்டியாளர்கள் தங்கள் பிரிவில் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி போட்டியாளரின் பிரிவில் நடை பெறாதவிடத்து போட்டியாளர் தமது வயதுப் பிரிவிலும் கூடிய வயதுப் பிரிவில் நடைபெறும் அப் போட்டியில் பங்குபற்றலாம்.**
4) **வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் இறுதியாக 2009ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்தப் பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையவராகார்.**
5) **2009ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை மனனப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் தேசிய நிலையில் நடைபெறாத கவிதை மனனப் போட்டி ஒன்றில் மீண்டும் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். 2009ம் ஆண்டு தேசிய நிலையில் நடைபெற்ற எழுத்தறிவுப் போட்டி, பாடல் மனனப் போட்டி, பேச்சுப் போட்டியி ஆகியவற்றில் முதற்பரிசு (அதாவது தங்கப் பதக்கம்) பெற்றவர்கள் மீண்டும் இவ்வருடம் அதே போட்டிகளில் எப்பிரிவிலேனும் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
6) அண்மையில் இந்தியா அல்லது இலங்கையிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களுக்கென 8, 12, 15, 18 வயதுக்குட்பட்டவர்கள் என நான்கு பிரிவுகளில் விசேட போட்டிகள் நடாத்தப்படும். அவர்கள் சாதாராணப் பிரிவுப் போட்டிகளில் பங்குபற்ற முடியாது என்பதை அறியத் தருகின்றோம். (மேலதிக விபரத்துக்கு 5.1ஐப் பார்க்கவும்).
7) போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சி (Passport or Birth certificate) தேவைப்படின் அவற்றை காண்பிக்க வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப் பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.
8) 2009ஆம் ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் 2010 இல் தத்தமது போட்டிகளுக்கு முன்பாகக் கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2010 போட்டிகளிற் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**
9) ஒவ்வொரு போட்டியாளாரிடமும் விண்ணப்பக் கட்டணமாக **$5.00** உடன் ஒவ்வொரு போட்டிக்கும் தலா **$5.00** கட்டணமாக அறவிடப்படும்.
10) இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் **12-07-2010** ற்கு முன்னர் Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

போட்டி: சரி / பிழை வயது பிரிவு: சரி / பிழை இல:............

கட்டணம்: ............... செலுத்தப்பட்டது / செலுத்தப்படவில்லை

குறிப்பு:..........................................................................................

..........................................................................................

போட்டி இணைப்பாளர்:.......................................திகதி:...................................

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 3**

## கவிதை மனனப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்

1. **கவிதை மனனப் போட்டி - (பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு)**
   போட்டிக்குக் கொடுக்கப்படும் கவிதைகளை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஆனால் அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. பாலா் பிரிவிலும், ஆரம்ப பிரிவிலும் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்களும், கீழ்ப்பிரிவில் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

2. **விசேட கவிதை மனனப் போட்டி - (அதிமேற் பிரிவு)**
   இப்போட்டிக்கு 10 திருக்குறள்கள் பொருளுடன் கொடுக்கப்படும். பத்துக் குறள்களையும் பொருளுடன் பிளையின்றித் தெளிவாகக் கூறல் வேண்டும்.

3. போட்டியின் போது உச்சரிப்பு(30%), பொருளுணர்ந்து கூறுதல் (25%), சபை மரபும் ஆதிக்கமும் (30%) மனனஞ் செய்யும் திறமை (15%), ஆகியன கவனிக்கப்படும்.

4. **உச்சரிப்புத் திறன்** (30 %)
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது ஒப்புவித்தல்
     (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)
   - பாலா் பிரிவுக் குழந்தைகளின் மழலைத் தமிழுக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது.

5. **பொருள் உணர்ந்து கூறும் திறன்** (25%),
   - பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
   - ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்திக் கவிதையைக் கூறுதல்
   - வரிகளுக்குத் தகுந்த உணர்ச்சி(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

6. **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (30%)
   - மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
   - அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவா்களையும் மரியாதை செய்து கவிதையை ஆரம்பித்தல்.
   - கவிதையை ஒப்புவிக்கும்போது உடலை நேராகவும், தளா்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும்,செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
   - சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவா்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆக்யவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
   - முக பாவனை: கவிதையின் பொருளை அனுபவித்து, இரசித்து ஒப்புவிக்கும் பாங்கு.

- ❖ முக்கியமாக கவிதையைக் கவிதை நடையில் கூறவேண்டும்.

7) **மனனஞ் செய்யும் திறன்** (15%)
- ❖ சொற்களைத் தவறவிடாது, மாற்றாது முழுவதையும் கூறுதல். (கவிதை வரிகளைத் தவறவிடுமிடத்தோ, அல்லது மாற்றுமிடத்தோ புள்ளிகள் குறைக்கப்படும்.)
- ❖ சரளமான ஆற்றொழுக்கான ஒப்புவிப்பு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வரியை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்).
- ❖ எழுத்துப் பிரதியையோ அல்லது துணைக்குறிப்பையோ பார்த்து கவிதையைக் கூறமுடியாது. இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ கவிதை வரியை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் விட்ட இடத்திலிருந்து தொடங்க உதவலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள்(பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது.

8. **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**
- ❖ போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- ❖ நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- ❖ உங்கள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பாதுவிட்டாலோ அல்லது பிழையான தரவுகள் தரப்பட்டாலோ இப்போட்டியிற் பங்குபற்ற அனுமதி மறுக்கப்படலாம் என்பதை அறியத்தருகின்றோம். எல்லாப் போட்டியாளர்களும் தமது பிறந்த திகதி, அவுஸ்திரேலியாவிற்கோ, நியூசிலாந்திற்கோ குடியேறிய திகதி ஆகிய விபரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.
- ❖ போட்டிகளுக்கான கவிதையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வந்து இவற்றை பேட்டி இணைப்பாளருக்குக் காண்பிக்க வேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினைக் காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- ❖ விண்ணப்பக் கட்டணத்தையும் ($5.00) போட்டிக்கான கட்டணத்தையும் (ஒவ்வொரு போட்டிக்கும் $5.00) முன்கூட்டியே செலுத்தி இருத்தல் வேண்டும்.
- ❖ உங்கள் மின்னஞ்சல் விபரத்தையும், உங்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவேண்டின் நீங்கள் பெரிதும் விரும்பும் தொடர்பாடல் முறையையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

9) எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளில் தொடர்பு கொள்ளவும்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இலுந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 4**

## பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) மத்திய பிரிவிற்கும் (8-9 வயது), மேற்பிரிவிற்கும் (10-11 வயது), அதிமேற்பிரிவிற்கும் (12-14 வயது) உரிய பேச்சுகள் எம்மால் எழுதி வழங்கப்படும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் பேச்சினை மனனஞ் செய்து 5 நிமிடங்களுக்குள் பேச வேண்டும்.

2) இந்த மூன்று பிரிவுகளுக்குமான பேச்சுப் போட்டிகளும் மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடாத்தப்படும். மாநில மட்டத்தில் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் போட்டியாளர்கள் தேசியநிலைப் போட்டிக்கு அனுமதி பெறுவர்.

3) பேச்சுப் போட்டிக்கு மதிப்பீடு செய்யப்படும் அம்சங்கள்: **உச்சரிப்பு** (30%), **பொருளுணர்ந்து பேசுதல்** (25%), **சபைமரபும் ஆதிக்கமும்** (25%), **மனனஞ்செய்தல்** (20%), என்ற வகையாகக் கணிக்கப்படும்.

4) **உச்சரிப்புத் திறன்** (30 %)
- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
- தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent).
- சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)

5) **பொருள் உணர்ந்து பேசும் திறன்** (25%),
- பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
- ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
- வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களைத் தகுந்தவாறு கையாளுதல்
  (உ+ ம்: "அது எங்கே ?" என்பதை "அது எங்கே" போலப் பேசுதல் ஆகாது)
- வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது நன்று.)

6) **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (25%)
- மேடைக்குச் செல்லும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சை ஆரம்பித்தல். ("தாரகை நடுவில் தண்மதி போல வீற்றிருக்கும் நடுவர்களே..." போன்ற மிகைப்படுத்தப்பட்ட வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் கிடையாது.)
- பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல்.
  (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
- முக பாவனை: பேச்சின் பொருளை அனுபவித்து, இரசித்துப் பேசும் பாங்கு.

- தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.
  (மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.)

7) **மனனஞ் செய்யும் திறன்** (20%)

- வசனங்களையோ பந்திகளையோ தவறவிடாது பேச்சு முழுவதையும் பேசுதல்.
- எழுத்துப் பிரதியையோ, குறிப்புக்களையோ பார்த்துப் பேசுதல் ஆகாது. அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- வசனத்தை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் மீண்டும் தொடர்வதற்கு உதவி செய்வர். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- சரளமான ஆற்றொழுக்கான பேச்சு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வசனத்தை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)
- போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள் (பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அப்படிச் செய்யுமிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

8) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**

- போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாகத் தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். இவ்விதம் பெறமுடியாதவர்கள் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பாதுவிட்டாலோ அல்லது பிழையான தரவுகள் தரப்பட்டாலோ இப்போட்டியிற் பங்குபற்ற அனுமதி மறுக்கப்படலாம் என்பதை அறியத்தருகின்றோம். எல்லாப் போட்டியாளர்களும் தமது பிறந்த திகதி, அவுஸ்திரேலியாவிற்கோ, நியூசிலாந்திற்கோ குடியேறிய திகதி ஆகிய விபரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.
- போட்டிகளுக்கான பேச்சை எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வந்து இவற்றை பேட்டி இணைப்பாளருக்குக் காண்பிக்க வேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினைக் காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தையும் ($5.00) போட்டிக்கான கட்டணத்தையும் (ஒவ்வொரு போட்டிக்கும் $5.00) முன்கூட்டியே செலுத்தி இருத்தல் வேண்டும்.
- உங்கள் மின்னஞ்சல் விபரத்தையும், உங்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவேண்டின் நீங்கள் பெரிதும் விரும்பும் தொடர்பாடல் முறையையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

9) எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளில் தொடர்பு கொள்ளவும்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இலுந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 5**

## வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. இப்போட்டி பின்வரும் வயதுப்பிரிவுகளுக்கு நடாத்தப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு | - 5 வயது | கீழ்ப் பிரிவு | - 6-7 வயது |
| மத்திய பிரிவு | - 8-9 வயது | மேற்பிரிவு | - 10-11 வயது |
| அதிமேற் பிரிவு | - 12-14வயது | இளைஞர் பிரிவு | - 15-17 வயது |

2. இப்போட்டி, நாளாந்தம் குடும்பத்தில் மற்றும் தமிழ் கல்வி நிலையங்கள், தமிழ் சமூகத்தினரின் திருமணங்கள், தமிழ் கலாசார நிகழ்ச்சிகள், ஒன்றுகூடல்கள் போன்ற பொது வைபவங்களில் இடம்பெறக்கூடிய உரையாடல்களைப் போன்றதாக இருக்கும். உலகத் தமிழ் சமுதாயம் சம்பந்தமானதாகவும் அவரவர் வயதுப்பிரிவிற்கேற்ப வேறுபட்ட தரங்களில் அமைந்திருக்கும். மேற்பிரிவு போட்டியாளர்கள் அவர்களின் பெற்றோரின் தாய்நாடு பற்றியும் அங்குள்ள தற்கால நிலமை பற்றியும் அறிந்திருத்தல் விரும்பத்தக்கது.

3. இவ்வுரையாடல் சுமார் 7-10 நிமிடங்களுக்கு இடம்பெறும். ஒவ்வொரு போட்டியாளரிடமும் அறிமுகக் கேள்விகளுடன், குறைந்தது 5 கேள்விகள் கேட்கப்படும். இதில் உரையாடலுக்குத் தான் முக்கியமே தவிர போட்டியாளர்களின் பதில் தரவுகளின் நியாயப்பாடு, சரி/பிழைக்குப் புள்ளிகள் இல்லை. அத்துடன், வாசித்தல் பகுதியும் இந்தப் போட்டியின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. படங்கள் முதல் தமிழ்க் கட்டுரையின் ஒரு பந்தி வரை வேறுபட்ட விடயங்கள் பிரிவிற்கேற்ப வழங்கப்படும்.

4. போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் மண்டபம் அல்லாத ஒரு அறையில் இருக்கவேண்டும். ஒவ்வொருவராக அழைக்கப்படும் போட்டியாளர் மட்டும் போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வர அனுமதிக்கப்படுவார். இப்போட்டிகளின் போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்தவேளையில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். போட்டியாளரின் பெற்றோர் முன்கூட்டியே மண்டபத்தில் வந்து இருக்கலாம் அல்லது தமது பிள்ளைகளை அழைக்கும் போது அவர்களுடன் மண்டபத்துள் வரலாம். ஏற்கனவே போட்டிகளை பார்த்த பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும், போட்டி நடைபெறும் மண்டபத்தில் இருந்து வெளியேறிவிட்டுப் போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற தமது பிள்ளைகளை சந்திக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

5. போட்டியின் போது **உச்சரிப்பு** (15 %), **சொற்பிரயோகம்** (20 %), **உரையாடும் திறனும் & பங்குபற்றும் நிலையும்** (50 %), **தமிழ் வாசிப்பு** (15 %) ஆகியன கவனிக்கப்படும்.

6. **உச்சரிப்புத் திறன்** (15 %)
   - பிராந்தியப் பேச்சு வழக்கு, அதாவது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உச்சரிப்புகளும், அவர்களது பேச்சு வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள்
   - வல்லின, மெல்லின வேறுபாடு அறிந்து தெளிவாக உரையாடுதல்
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது உரையாடுதல்

7. **சொற்பிரயோகம்** (20 %)
   - தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
   - ஊரையாடலின் போது ஆங்கிலச் சொறிகள் பயன்படுத்தினால் புள்ளிகள் குறைக்கப்படும்.

   (உதாரணமாக: `பந்து' என்பதற்குப் பதிலாக `Ball' என்று பாவிப்பது தவிர்க்க வேண்டும்).

- ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ் பதம் இல்லாதவிடத்தில் அதே சொல்லை அதே உச்சரிப்புடன் பயன்படுத்தலாம். உ+ம்: Australia, calculator, Video, DVD, CD எனும் பொதுப் பாவனையிலுள்ள சொற்கள் ஏற்கப்படும்.
- கேள்விகள் விளங்காவிட்டால், போட்டியாளர் கேள்வியை மீண்டும் ஒரு முறை வினாவும்படி கேட்கலாம். அப்படியும் கேள்விகள் விளங்காத சந்தர்ப்பத்தில், இலகுவான விதத்தில் கேள்விகள் கேட்கப்படும்.

### 8. உரையாடும் திறனும் & பங்குபற்றும் நிலையும் (50 %)

- பல விதமான வினாக்களுக்கும் சரியான அளவான பதில் அளிக்கும் தன்மை.
  - விரிவான பதில் எதிர்பார்க்கப்படும் (Open ended question) வினா, உ+ம்: உங்களுடைய மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றி கூறுங்கள்?
  - சுருக்கமான பதில் எதிர்பார்க்கப்படும் (Close ended question) வினா, உ+ம்: உங்களுக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரைச் சொல்லுங்கள்?
- சரளமாக உரையாடும் தன்மை. அநாவசியமான, அளவிற்கதிகமான, அதிகப்பிரசங்கித்தனமான, உரையாடலுக்கும், வெட்டொன்றாக அமையும் ஒரு வரிப் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். உரையாடலை இரசித்துப் பங்குகொள்ளும் தன்மை. அத்துடன் உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு முகபாவனைகள் காட்டப்பட வேண்டும்.
- போட்டியாளர்கள் நடுவர்களைப் பார்த்து (good eye contact), தன்னம்பிக்கையுடன், உரையாடுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆக்யவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் வேண்டும். உரையாடலின் போதும் கேள்விகள் கேட்கப்படும் போதும் அலட்சியமாக இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், நடுவர்களை மரியாதை செய்தும் உரையாடல்.
- கேள்வி கேட்கப்படும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு செய்வதனால் கேள்வியை அவதானிக்காது, திரும்பவும் கேள்வியைக் கேட்டால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- சைகைகளினால் வழங்கப்படும் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

### 9. தமிழ் வாசிப்பு (15 %)

- மொழி கற்றலில் 'வாசித்தல்' மிக முக்கியமானது. சிறிய வயதுப் பிரிவினருக்கு படங்களை அல்லது எழுத்துக்களைக் காட்டி அவர்களுடன் உரையாடல் நடாத்தப்படும்.
- உயர் பிரிவினருக்கு வசனங்களையோ, ஒரு தமிழ்க் கட்டுரையின் பந்தியையோ வாசிக்கும்படி கேட்கப்படும். இந்த வசனங்கள், பந்திகள் தமிழ்ப் பாடப் புத்தகங்களிலிருந்து தெரிவு செய்யப்படும்.
- அதிமேற்பிரிவினருக்கான வாசிப்பதற்குரிய பந்திகள் தமிழ் நூல், செய்தித்தாள், அல்லது சஞ்சிகைகளிலிருந்து பெறப்படும்.
- சோறிகளின் உச்சரிப்பு, சரளமாக தடை இன்றி வாசிக்கும் திறன், பொருள் உணர்ந்து வாசித்தல் என்பன கவனிக்கப்படும்.

### 10) போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:

- ➢ போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- ➢ நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய எல்லா விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாகத் தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- ➢ போட்டி ஆரம்ப மாவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- ➢ விண்ணப்பக் கட்டணத்தையும் ($5.00) போட்டிக்கான கட்டணத்தையும் (ஒவ்வொரு போட்டிக்கும் $5.00) முன்கூட்டியே செலுத்தி இருத்தல் வேண்டும்.
- ➢ எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளில் தொடர்பு கொள்ளவும்.
- ➢ போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.
- ➢ எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 6**

## எழுத்தறிவுப் போட்டிகளின் விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) கீழ்ப்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (6-7 வயது): இது ஒரு மணி நேரப் பரீட்சை ஆகும்.
2) மத்தியபிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (8-9 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
3) மேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (10-11 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
4) அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (12-14 வயது): இது 2 மணி நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
5) இளைஞர் பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (15-17 வயது): இது 2 மணி நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பரீட்சைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

**முதல் பகுதியில் உள்ள 50 வினாக்கள்** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடையாளமிடுவதாகவோ அல்லது கோடிட்ட இடங்களை நிரப்புவதாகவோ அமைந்திருக்கும்.

**இரண்டாவது பகுதியில்,** கொடுக்கப்பட்டுள்ள ஒரு தலைப்பின் கீழ் 200 சொற்களுக்குட்பட கட்டுரை அல்லது கடிதம் ஒன்றினை எழுதும்படி கேட்கப்படுவர். இதில் தலைப்பும் - அதனை ஒட்டிய பொருளும், கட்டுரை/கடிதத்தின் அமைப்பு, இலக்கண சுத்தி என்பன கவனிக்கப்படும்.

6) எழுத்தறிவுப் போட்டிகள் நியூசவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகளின் பாடத்திட்டத்தைத் தழுவியதாக அமையும். அவுஸ்திரேலிய மொழிக்கல்வி தொடர்பான அணுகுமுறையும் (approach), விடயதானமும் (contents), அடைவுகளும் (outcomes) எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.
7) எழுத்தறிவுப் போட்டிகள் மாநில, தேசிய மட்டங்களில் நடாத்தப்படுகின்றன. எனவே மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாணவர்களிடையே முதற் பரிசு பெறும் போட்டியாளருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.
8) ஒவ்வொரு பிரிவிற்கும் அதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடப் பரீட்சையிலிருந்து சில வினாக்களும், வேறும் இந்த வகையான கேள்விகளும் வேறுசில கேள்விகளும் இடம்பெறலாம்.

9) போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாகத் தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
- கடந்த ஆண்டு (2006, 2007, 2008 & 2009) எழுத்தறிவுப் போட்டிகளுக்கான வினாத்தாள்கள் எமது இணையத்தளத்திலிருந்து (www.kalappai.org) பெறலாம்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வந்து இவற்றை பேட்டி இணைப்பாளருக்குக் காண்பிக்க வேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினைக் காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தையும் ($5.00) போட்டிக்கான கட்டணத்தையும் (ஒவ்வொரு போட்டிக்கும் $5.00) முன்கூட்டியே செலுத்தி இருத்தல் வேண்டும்.
- எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளில் தொடர்பு கொள்ளவும்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இலுந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 7**

## விவாதப் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும். போட்டிக்கான தலைப்புக்கள் போட்டியிடும் குழுவினருக்கு அறிவிக்கப்படும்.

2. இப்போட்டியில் மேற்குறிப்பிட்ட வயதுப்பிரிவுக்குட்பட்ட தகுதியுடைய போட்டியாளர்கள் மும்மூன்று போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.

3. போட்டியாளர்கள் விவாதத்தின் போது துணைக்குறிப்புகளைப் பயன்படுத்தலாம். ஆனால் தமது விவாதத்தினை எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கக் கூடாது. எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கும் போட்டியாளர்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

4. விவாதக் குழுவினைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தனித் தனியே 5 நிமிடங்கள் கொடுக்கப்படும். 5 நிமிடங்கள் முடிந்ததும் மணி ஒருமுறை அடிக்கப்படும். தொடர்ந்து அவர் பேசினால் 30 வினாடிகளுக்குப் பின் மணி இரு முறை அடிக்கப்படும். இரண்டாவது மணி அடித்தவுடன் அவர் பேச்சை நிறுத்த வேண்டும். 5 நிமிடங்களுக்கு மேலாகப் பேசுமிடத்தும், 3 நிமிடங்களுக்குக் குறைவாகப் பேசுமிடத்தும் புள்ளிகள் குறைக்கப்படும்.

5. மூன்று போட்டியாளர்களும் பேசி முடிந்த பின் விவாதக் குழுவின் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் விவாதத்தினை முடித்துத் தொகுப்புரை வழங்குவதற்கு 3 நிமிடங்கள் கொடுக்கப்படும். ஆதரித்துப் பேசும் குழுவின் தலைவர் விவாதத்தை முடித்து வைப்பார்.

6. விவாதத்தில் கவனிக்கப்படும அம்சங்கள் + புள்ளிகள் வழங்கப்படும் விபரங்கள்:
   - ❖ இருவர் தனது அணிக்கு ஆதரவாக முன்வைக்கும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
   - ❖ எதிர் அணியினர் கூறிய கருத்துக்களுக்கு மறுத்துக் கூறும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
   - ❖ தேவை ஏற்படின் ஒரு அணியினர் ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறலாம். ஆனால் தேவையற்ற சந்தர்ப்பத்தில் அந்த அணியின் ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் கூறுவதால் எவ்வித மேலதிக புள்ளிகளும் கிடைக்கமாட்டாது.
   - ❖ அணித் தலைவர் தொகுப்புரையில் அவரது அணி முன்வைத்த கருத்துகளின் சாராம்சத்தை வழங்கவேண்டும். அத்துடன் அந்த அணியினர் மறுத்துக் கூறிய கருத்துக்களையும் தொகுத்து வழங்குவதன் மூலம், அந்த அணியின் கருத்து-பேச்சு வன்மையை நிலை நிறுத்த வேண்டும்.
   - ❖ விவாதக் களத்தில் தலைப்போடு ஒன்றிய விடயங்களே பேசப்படவேண்டும். வாதியையோ, பிரதிவாதியையோ தனிப்பட்ட முறையில் சாடுவதையும், அவரவர் தனிப்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசுவதையும் தவிர்க்கவேண்டும்.

7. விவாதம் பற்றிய பொதுவான விளக்கங்களையும், மேலதிக அறிவையும் பெற `world debate website' http://www.flynn.debating.net/sydrules.htm என்ற இணையத்தளத்தில் பார்க்கலாம்.

8 விவாதக் குழுக்கள் எந்தெந்தத் தரப்பில் வாதிடுவர் என்பது சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். அரை இறுதிப் போட்டிகள் மூலம் இறுதிப்போட்டிக்குப் பங்குபற்றத் தகுதி உடைய குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படும். அரை இறுதிப் போட்டி முடிவடைந்ததும் இறுதிப் போட்டிக்கான தலைப்புக் கொடுக்கப்படுவதுடன் விவாதத்தை ஆதரித்து, எதிர்த்து பேசுவதற்கான ஒழுங்கு, சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

9 ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் இறுதிப் போட்டியில் பங்குபற்றிச் சிறந்ததெனத் தெரிந்தெடுக்கப்படும் குழுவிற்கு முதல் பரிசும் அடுத்த குழுவிற்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

10. மற்றைய போட்டிகளுக்கான பொது விதிமுறைகளையும் பார்க்கவும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 8**

## குழு வினாடி - வினாப் போட்டியின் விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும்.
2. இப்போட்டி 15, 18 வயதிற்குற்பட்ட பிரிவுகளில் நடைபெறும். இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் ஐந்து போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.
3. கேட்கப்படும் கேள்விகள் தமிழ் மொழி, மற்றும் கலாசாரம் சம்பந்தப்பட்டதாக இருக்கும். சில வரலாறு தொடர்பான கேள்விகளும், பொதுக் கேள்விகளும் கேட்கப்படும்.

4. வினா கேட்கப்பட்ட போட்டியாளர் மற்றவர்களுடன் **கலந்தாலோசிக்காது**, அந்த வினாவிற்கான சரியான பதிலை அளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். அவர் பிழையாகப் பதிலளித்தாலோ அல்லது தனக்குக் கொடுக்கப்பட்ட 30 வினாடிகளுக்குள் பதிலளிக்காது விட்டாலோ, அந்தக் குழுவிவைச் சேர்ந்த வேறு யாவராவது தங்கள் குழுவினருடன் **கலந்தாலோசித்தபின்** சரியான பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும். கேட்கப்பட்ட குழு பதிலளிக்கத்தவறினால் எதிர் அணியினரிடம் அந்த வினா கேட்கப்படும். எதிர் அணியினர் தங்கள் குழுவினருடன **கலந்தாலோசித்தபின்** யாராவது ஒருவர் அந்த வினாவிற்கு பதிலளிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 30 வினாடிகள் கொடுக்கப்படும். பிழையான விடைகளுக்குப் புள்ளிகள் எதுவும் கழிக்கப்படமாட்டாது.

5. வினாக்கள் மாறிமாறி இரு குழுக்களிடையேயும் கேட்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் கேள்விகள் முதலாம் போட்டியாளரிலிருந்து இறுதிப் போட்டியாளர் வரை கேட்கப்படும்.
6. விடைகளைத் தெளிவான உச்சரிப்புடன் வழங்கவேண்டும்.

7. போட்டிகள் இரண்டு சுற்றுகளாக நடைபெறும். இரண்டாவது சுற்றின் பின் கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் அணி வெற்றி பெறும். அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி, இறுதிப் போட்டிக்கு தெரிவாகும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி முதற்பரிசையும், இரண்டாவதாக வரும் அணி ஆறுதல் பரிசையும் பெறும்.
8. இறுதிச் சுற்றில் இரு அணிகளும் ஒரேயளவு புள்ளிகளைப் பெறுமிடத்து மூன்றாம் சுற்று நாடாத்த வேண்டிய தேவை ஏற்படலாம். மூன்றாம் சுற்றில் ஒவ்வொரு கேள்வியும் குழுநிலையில் விடை அளிக்க அனுமதியளிக்கப்படும். குழுவின் தலைவர் மற்ற குழு அங்கத்தவர்களிடம் கலந்துரையாடியபின், 30 வினாடிகளுக்குள் தமது விடையை தெரிவிக்க வேண்டும். அவர்கள் சரியான விடையை அளிக்கத் தவறும் பட்சத்தில், எதிர் அணியினரிடம் அந்த வினா கேட்கப்படும். அதற்கான விடையை எதிரணியும் குழு நிலையில் ஆலோசித்தபின் அக்குழுவின் தலைவர் இந்த வினாவிற்கான விடையை 30 வினாடிகளுக்குள் அளிக்கலாம்.

### 9. போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:

- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய முழு விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
- எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளில் தொடர்பு கொள்ளவும்.
- போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இலுந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010

## Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 9**

## தனிநடிப்புப் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) 12 வயதுக்குட்பட்டோர், 12 - 17 வயதுக்கு இடைப்பட்டோர், என்ற இரண்டு விசேட பிரிவுகளில் இப்போட்டி நடைபெறும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் கருப் பொருளை ஒட்டிய செய்தியை வெளிக்காட்டும் வகையில் நடித்துக் காட்ட வேண்டும். இந்த நடிப்பு 3 நிமிடங்களுக்குக் குறையாமலும், 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

2) **போட்டிக்கான கருப்பொருள்:** ***"புதியதோர் உலகம் செய்வோம்"*** என்பதாகும். இந்தக் கருப் பொருளுடன் கூடிய தலைப்பு ஒன்றில் (சுருக்கமான செய்தி) நீங்கள் நடித்துக் காட்ட வேண்டும்.

3) போட்டியாளரின் நடிப்புத் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும். **கருவோடு ஒன்றிய செய்தி (விடயம்) வெளிப்பாடு (30%), பாத்திரத்தோடு ஒன்றிய நடிப்பு (50%), மேடை உத்திகள், ஒப்பனை (20%)** என வகையாகக் கணிக்கப்படும்.

4) **கருப்பொருளுடன் ஒன்றிய செய்தி (விடயம்) வெளிப்பாடு (30%),**
   - போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து), "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற எமது கருப்பொருளோடு ஒட்டியதாகவும், சமூக விழுமியங்களுக்கு அமைவதாகவும் இருத்தல் வேண்டும்.
   - உங்கள் தயாரிப்பு சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
   - நெறியாள்கையும் கவனித்திற் கொள்ளப்படும்.

5) **பாத்திரத்தோடு ஒன்றிய நடிப்பு (50%)**
   - எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தைச் சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல்.
   - மேடை நடிப்பின் அடிப்படை அம்சங்களுக்கு அமைய நடித்தல் (மேடைக் கூச்சத்தைத் தவிர்த்தல் வேண்டும்: நடித்துக் காட்டுதல்: அங்க அசைவுகளும் அவற்றின் மேல் நடிப்பவரின் கட்டுப்பாடும், தெளிவான விளக்கமான நடிப்பு சொற்பிரயோகம், இயல்பான நடிப்பு.
   - வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.)
   - தொய்வில்லாத நடிப்புத் தொடர்ச்சியும் ஒழுங்கமைக்கபட்ட நடிப்பும்.

6) **மேடை உத்திகள், ஒப்பனை (20%),**
   - நடிப்பு உத்திகள் - உ + ம்: குறியீடுகள், பல பாத்திரம் ஏற்றல், மேடைப் பயன்பாடு
   - ஒப்பனை காதாபாத்திரத்திற்கும், எடுத்துக் கொண்ட கருப் பொருளுக்கும் இயைபாக இருக்கவேண்டும். ஒவ்வாத, மிகையான ஒப்பனையைத் தவிர்க்க வேண்டும்.
   - ஒலி, ஒளி, மேடை அமைப்புக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.
   - மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது. மேடை விபரங்களைப் பற்றி அறிய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
   - மேடை அமைப்புக்கு மேலதிக நேரம் வழங்கப்பட மாட்டாது. மேடை அமைப்பு ஏனைய போட்டியாளர்களுக்கு இடையூறாக இருக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்.

7) போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்றய போட்டிகளில் பார்க்கவும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 10**

## இளைஞர் பல்திறன் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) இளைஞர் பல்திறன் போட்டி 18 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான விசேட போட்டியாக இடம்பெறும். இரு போட்டியாளர்கள் கொண்ட குழுவாகப் பங்குபற்றவேண்டும்.
2) போட்டியின் போது நகைச்சுவைத் திறன், உடனே சிந்திக்கும் திறன் (thinking on the spot), மற்றும் சபை மரபு ஆகியவை கவனிக்கப்படும். உச்சரிப்பும் சொற்பிரயோகமும் பொருத்தமாக இருக்கவேண்டும்.
3) இப் போட்டி 5 - 6 நிமிடங்களுக்கு இடம்பெறும்.
4) **போட்டிக்கான கருப்பொருள்:** ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்பதாகும். போட்டியின் தொடக்கத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் இந்தக் கருப் பொருளுடன் கூடிய தலைப்பு (சூழ்நிலை) சீட்டிழுப்பின் மூலம் கொடுக்கப்படும். சூழ்நிலைகள் பாடசாலை அல்லது குடும்பம் அல்லது தமிழ்க் கலாசாரம் சம்பந்தப்பட்டவையாக அமையும். குழுவில் இருக்கும் இருவரும் இந்த சூழ்நிலைக்கு ஏற்ப தங்கள் நகைச்சுவையுடன் கூடியதாக நடித்தோ, பேசியோ, பாடியோ, ஆடியோ தமது திறன்களை வெளிப்படுத்தலாம். ஆனால் ஒரு வகையான திறன் அதீதமாக (குறிப்பாக பாடலோ அல்லது ஆடலாகவோ) இருத்தல் கூடாது.

5) போட்டியாளரின் நடிப்புத் திறன் பின்வரும் அம்சங்களிற் கவனிக்கப்படும்.
**கருவோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு** (30%), **குழுவின் முழுத்திறன்** (50%), **நகைச்சுவையுடன் கூடிய சபை ஆதிக்கம்** (20%) என்ற வகையாகக் கணிக்கப்படும்.

6) **கருவோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு** (30%),
- போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து), ‘புதியதோர் உலகம் செய்வோம்’ என்ற எமது கருப்பொருளோடு ஒட்டியதாகவும், சமூக விழுமியங்களுக்கு அமைவதாகவும் இருத்தல் வேண்டும்.
- தழுவல் இல்லாத சுய தயாரிப்பாக இருத்தல் வேண்டும்.

7) **குழுவின் முழுத்திறன்** (50%)
- எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தைச் சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல், பேசுதல், பாடுதல், ஆடுதல்.
- மேடையில் உங்கள் நிகழ்வு தனியே ஒரு அம்சத்தைக் (முழுமையாக பாடலாகவோ அல்லது நடனமாகவோ) கொண்டதாக இருக்கக்கூடாது.
- தொய்வில்லாத தொடர்ச்சியான ஒழுங்கமைக்கபட்ட நிகழ்வு முக்கியம்.

8) **நகைச்சுவையுடன் கூடிய சபை ஆதிக்கம்** (20%),
- கருத்தோடு ஒட்டிய நகைச்சுவை உங்கள் நிகழ்வில் எதிர்பார்க்கப்படும்.
- நகைச்சுவையுடன் புதிய உத்திகள் பாவிக்கப்படலாம்.
- மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது.

9) போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்றைய போட்டிகளில் பார்க்கவும்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

இணைப்பு: 11

## கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு (5 வயதின்கீழ்)

(பிறந்த திகதி: 01.07.2005 க்குப்பின் பிறந்தோர்)

### முத்தம் தா

கண்ணே மணியே முத்தம் தா!
கட்டிக் கரும்பே முத்தம் தா!
வண்ணக் கிளியே முத்தம் தா!
வாசக் கொழுந்தே முத்தம் தா!

தேனே பாலே முத்தம் தா!
தெவிட்டாக் கனியே முத்தம் தா!
மானே மயிலே முத்தம் தா!
மடியில் வந்து முத்தம் தா!

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
நூல் – "மலரும் மாலையும்"

---

## கவிதை மனனப் போட்டி – ஆரம்பப் பிரிவு (5 வயது)

(பிறந்த திகதி: 01.07.2004 - 30.06.2005)

புலம்பெயர் தமிழரே கூடிடு வோம் – நல்ல
புதியதோர் உலகினை நாம்சமைப் போம்!
நிலமொன்று தமிழர்க்கு வேண்டும் அன்றோ? – அந்த
நினைவொடு செயலாற்றத் தோள்கொடுப் போம்

சூழலைக் காப்பதோ எம் கடமை– மாசுத்
தொல்லைகள் அற்றநீர் காற்றுங் தேவை
வாழுமெம் நாட்டினைச் சொர்க்கம் என – என்றும்
வளமான பூமியாய் மாற்றிடு வோம்

இளமுருகனார் பாரதி

குறிப்பு: ( சூழல் – Environment, மாசு – Pollution)

# கவிதை மனனப் போட்டி
## கீழ் பிரிவு (6 - 7 வயது)

(பிறந்த திகதி: 01.07.2002 - 30.06.2004)

## புதியதோர் உலகம் படைப்பிரே!

காசினி எதிர்கொள்ளும் இயற்கையின் சீற்றத்தைக்
    கண்டும்ஏன் அலட்சியம்? கருத்தினிற் கொள்வமே!
மாசிலாச் சூழலை வளர்த்திடும் பணியுடன்
    மழைவளம் கூட்டிட நாட்டுவம் மரங்களே!
தேசமோ கேட்குதே புதுநலத் திட்டங்கள்
    செய்குவீர் புதியதோர் உலகம் படைப்பிரே!
ஆசையோ டாற்றுவீர் காலத்தின் தேவையே!
    ஆயினும் தமிழர்தம் துயர்மறந் திடுவிரோ?

புலம்பெயர் தமிழரே செவிசாய்த் திடுவிரே!
    புதியதோர் உலகினைச் சமைத்திடல் நன்றெலோ?
விலங்கிலும் கீழதாய்த் தமிழரை நடாத்திடும்
    விசித்திரத் தால்அவர் படுந்துயர் கேட்டிரோ?
கலங்கிடா நெஞ்சொடு ஒற்றுமை வளர்த்துநீர்
    கடமையாய் நினைத்தவர் இழிநிலை தீர்ப்பிரோ?
துலங்குமோ இனியவர் வாழ்வும் விடியுமோ?
    துணையென உம்கரம் அணைத்திட விழையுமோ?.

இளமுருகனார் பாரதி

குறிப்பு: (காசினி –World, இயற்கையின் சீற்றம் - Natural disaster)
(மாசு – Pollution, சூழல் - Environment)

**தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

# திருக்குறள் போட்டி
# (விசேட மேற்பிரிவு- 15 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 01.07.1997 க்குப்பின் பிறந்தோர்)

## அதிகாரம் 14 ஒழுக்கம் உடைமை

1) ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள் – 131)

இதன் பொருள்–
ஒழுக்கமே எல்லோருக்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

2) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (குறள் – 140)

இதன் பொருள்–
உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுக்க முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.

## அதிகாரம் 30 வாய்மை

3) வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதொன்றுந்
தீமை இலாத சொலல். (குறள் – 291)

இதன் பொருள்–
வாய்மை என்று கூறப்படுவது எதுவென்றால் அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

4) தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். (குறள் – 293)

இதன் பொருள்–
ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னால் அதைக்குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

## அதிகாரம் 60 ஊக்கம் உடைமை

5) உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (குறள் – 592)

இதன் பொருள்– ஒருவருக்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும். ஏனைய பொருளுடைமையானது நிலைபேறு இல்லாது நீங்கி விடுவதாகும்.

6) உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. (குறள் – 596)

இதன் பொருள்– எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதைக் கைவிடக் கூடாது.

## அதிகாரம் 79 நட்பு

7) முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்(து)
அகநக நட்பது நட்பு. (குறள் – 786)

இதன் பொருள்– முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று. நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்புகொண்டு நட்புச் செய்தலே நட்பு ஆகும்.

8) உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (குறள் – 788)

இதன் பொருள்– உடை நெகிழ்ந்தவனுடைய கை உடனே உதவிக் காப்பது போல் (நண்பர்க்கு துன்பம் வருங்கால்) அப்பொழுதே சென்று அவரின் துன்பத்தைக் களைவது நட்பு.

## அதிகாரம் 100 பண்புடைமை

9) பண்பு உடையார்ப் பட்டுஉண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மண். (குறள் – 996)

இதன் பொருள்– பண்பு, உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது. அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்துவிடும்.

10) அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பிலா தவர். (குறள் – 997)

இதன் பொருள்– மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் அரம்போல் கூர்மையான அறிவு உடையவரானாலும் ஓரறிவு உயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 12**

## பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு (பிறந்த திகதி: 01.07.2000 - 30.06.2002)

### புதியதோர் உலகம் செய்வோம்

ஆதிமனிதன் இயற்கையை இறைவனாக வழிபட்டான். இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்திருந்தான். அவன் இயற்கையை அழிக்கவில்லை. தான் வாழ்ந்த சூழலை மாசு படுத்தவில்லை. காய் கனிகளையும் கிழங்குகளையும் களிப்போடு உண்டான். சுத்தமான நீரைப் பருகினான். கால ஓட்டத்தில் மனிதர்களின் எண்ணிக்கை பெருகியது. மனிதர்கள் வசிக்கும் எல்லைகள் விரிந்தன. அவர்களின் அறிவும் படிப்படியாக விருத்தியடைந்தது. அவர்களின் தேவைகள் அதிகரித்தன. காடுகளை அழித்துக் கழனி ஆக்கினார்கள். அவர்களிடம் நாகரிகம் வளர்ச்சி பெற்றது. விஞ்ஞான அறிவும் வளர்ச்சியடையத் தொழிற்சாலைகள் பெருகின. மோட்டார் வாகனங்கள், நவீன உபகரணங்கள் ஆகியவற்றின் பாவிப்பும் அதிகரித்தது. இவற்றுடன் சுற்றுப்புறச் சூழலும் மாசடையத் தொடங்கியது.

அணுகுண்டுப் பரீட்சையின் விளைவுகள் உங்களுக்குத் தெரியாததல்ல. பலவித நச்சுக்காற்றுகள் எமது காற்று மண்டலத்தை அசுத்தப்படுத்தியதற்கு மனிதகுலமே காரணமாயிற்று. இந்நிலை நீடித்தால் உலகிற்குப் பெருந்தாக்கம் ஏற்படும் – உயிரினங்களுக்கும் மனித குலத்திற்கும் ஆபத்து விளையும் – இப்படியான விஞ்ஞானிகளின் எச்சரிக்கை உங்கள் செவிகளுக்கும் எட்டியிருக்கும் அல்லவா?

கரியமில வாயு போன்ற நச்சுக்காற்றுகளின் அதிகரிப்பு மற்றும் "ஓசோன்" படலத்தில் ஏற்பட்டுவரும் விரிசல் ஆகியவற்றால் வெப்பம் அதிகரிக்கிறது. துருவங்களில் பனிமண்டலம் உருகுவதால் கடலின் நீர்மட்டம் உயர்கிறது. சில தீவுகளைக் கடல்நீர் மூடிவிடலாம்! காடுகள் அழிவதால் மழை வீழ்ச்சியிற் குறைவு ஏற்பட்டுக் குடிநீர்த் தட்டுப்பாடு வரலாம்! சுவாசிக்கும் காற்று மேலும் மாசுபடலாம்! பூமியில் இப்படி எத்தனையோ ஆபத்துகள் வரலாம்! ஏற்படவிருக்கும் அழிவிலிருந்து பூமியைப் பாதுகாக்க வேண்டிய கடமை எமக்கு உண்டல்லவா? சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க எமக்குப் பல வாய்ப்புகள் உள்ளன. மாசகற்றும் சகல திட்டங்களுக்கும் ஆதரவு அளிப்போம். புதியதோர் உலகினைச் சமைத்திட உதவுவோம். நன்றி!

வணக்கம்.

**பேச்சுப்போட்டி - மேற்பிரிவு** (பிறந்த திகதி: 01.07.1998 - 30.06.2000)

# புதியதோர் உலகம் செய்வோம்

உலகில் மனிதன் தோன்றியமை தொடர்பான பல்வேறு கதைகள் உள்ளன. கிறிஷ்தவ, இஷ்லாமிய சமயங்கள் ஆதாம், ஏவாள் ஆகியோரே உலகின் முதல் மனிதர்கள் என்று கூறுகின்றன. வரலாற்று ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞானிகளும் உலகில் மனிதரின் தோற்றம், வளர்ச்சி பற்றிப் பல்வேறு ஆய்வுகளைச் செய்திருக்கின்றனர். இது தொடர்பான கதைகள், ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவற்றில் ஒரு பொதுவான விடயம் காணப்படுகின்றது. மனிதன் தனது ஆரம்ப நாள்களில் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தான் என்பதே அதுவாகும்.

கால ஓட்டத்தில் மனிதர்களின் எண்ணிக்கை பெருக, தொழில்நுட்ப அறிவும் வளர்ந்தது. காட்டில் வேட்டையாடியும், கனிகளை உண்டும் வாழ்ந்த மனிதன் காட்டை அழித்து விவசாயம் செய்யக் கற்றுக் கொண்டான். இதுவே மனிதன், இயற்கைச் சூழலை மாற்றியமைக்க முற்பட்ட முதலாவது சந்தர்ப்பம் எனலாம். தொடர்ந்து தான் வாழ்வதற்காக நகரங்களை அமைத்தான். அந்த நகர வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் சுற்றியுள்ள நீர் நிலைகளை மாசுபடுத்தத் தொடங்கின.

பின்னர் மனிதர்களிடையே மோதல்கள் உருவாக, துப்பாக்கிகள், ஏவுகணைகள், இரசாயனக் குண்டுகள் மனிதனாற் பயன்படுத்தப்பட்டன. இதனால் எமது பூமியின் நிலம், நீர், காற்று என்பன மாசு படுத்தப்பட்டன. இதன் உச்சக் கட்டமாக அணுக் குண்டுகளை மனிதன் பயன்படுத்தத் தொடங்கினான். இந்த அணு குண்டுகள் எமது வளி மண்டலத்தில் நீண்டகாலக் கதிர் வீச்சுத் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன.

பூமியின் சுற்றுச் சூழல் மாசடைவது பற்றி நாம் இன்னும் அலட்சியமாக இருப்போமானால், என்றோ ஒருநாள் எமது பூமிக் கிரகம் அழிந்துபோகும் அபாயம் உள்ளது. இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்காக உலகில் பல நாட்டு அரசாங்கங்களும், யுத்தத் தவிர்ப்பு நிறுவனங்களும், சுற்றாடல் பேணும் அமைப்புக்களும் பல வழிகளிற் செயலாற்றி வருகின்றன. நாமும் உலகின் இயற்கை வளங்களைப் பேண முன்வருவோம். மாசில்லாத சுற்றுச் சூழல் கொண்டதாக எமது பூமியை மாற்றி அமைப்போம். புதியதோர் உலகம் செய்வோம்!

வணக்கம்.

## பேச்சுப்போட்டி: அதிமேற்பிரிவு (பிறந்த திகதி: 01.07.1995 – 30.06.1998)

# புதியதோர் உலகம் செய்வோம்

மனிதகுலத்தை மேம்படுத்திவரும் விஞ்ஞான வளர்ச்சி எமது சுற்றுப்புறச் சூழலையும் பெரிதளவில் மாசடையச் செய்துவருகிறது. வல்லரசு ஆதிக்கப் போராட்டம், நவீன ஆயுதங்களின் கண்டுபிடிப்பு, புதிய விஞ்ஞான ஆய்வுகள் என்பனவற்றால் இயற்கையோடு மனிதனும் அழிவுநிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றான். என்றோ பரீட்சித்துப் பார்க்கப்பட்ட அணுகுண்டின் தாக்கம் இன்றும் அழிவைத் தந்தவண்ணம் இருக்கின்றதே! நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட போர்களில் எத்தனையோ விதமான பயங்கர குண்டுகள் பலகாலங்களாகப் பாவிக்கப்பட்டதை எல்லோரும் அறிவீர்கள். இவைகள் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி அவற்றைப் பாவித்த நாடுகள் அன்று சிந்திக்கவில்லை. இவை போன்று பலவழிகளில் சூழல் மாசடைகிறது அல்லவா?

மனிதனின் செயற்பாடுகளினால் உண்டாகும் நச்சுக்காற்றுக்கள் இரசாயன மாற்றங்களால் வேறு நச்சுக்காற்றுக்களைத் தோற்றுவிக்கின்றன. இவைகளிற் காணப்படும் குளோறின் ஒருஅணுவானது இலட்சம் நல்லஓசோன் அணுக்களை நிர்மூலம் செய்யவல்லது என்று விஞ்ஞான ஆராய்ச்சி கூறுகின்றது. கரியமில வாயுக்கள் போன்ற நச்சுக்காற்றுகளின் அதிகரிப்பாலும் ஓசோன் வலையத்தின் அழிவினாலும் படிப்படியாக அதிகரித்துவரும் வெப்பநிலையைக் குறைப்பதற்கு எத்தனையோ முறைகளைப் பலநாடுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றனவல்லவா? தென் துருவத்தின் மேலுள்ள ஓசோன் வலையத்தில் ஏற்பட்ட துவாரத்தை இயற்கை வழிகளில் மூடச்செய்ய இன்னமும் அரைநூற்றாண்டு எடுக்குமென்பது விஞ்ஞானக் கணிப்பாக இருக்கிறது. இப்பாதுகாப்பு முறைகளைத் தொடர்ந்து செயற்படுத்தாது விட்டாலோ அல்லது மேலும் மனிதனால் உண்டாக்கப்படும் நச்சுவாயுக்களைக் கட்டுப்படுத்தாது விட்டாலோ சூரியனின் புறஊதா கதிர்வீச்சினால் மனிதகுலத்திற்குப் பலவித நோய்கள்வரும் ஆபத்து ஏற்படலாம். தென் துருவத்தின் பனிமண்டலம் உருகுவதால் கடலின் நீர்மட்டம் உயர்வடைந்து சிலதீவுகள் நீரில் மூழ்கிடலாம். காடுகள் அழிப்பினாலும் அழிவினாலும் மழை வீழ்ச்சியிற் குறைவும் அதனால் குடிநீர்த் தட்டுப்பாடும் உருவாகலாம். இப்படிப் பலவித ஆபத்துகளை எதிர்கொள்ள நேரிடுமன்றோ?

எம்சூழலைத் தூய்மையாய் வைத்திருக்க எத்தனையோ வழிவகைகளை விஞ்ஞானிகள் அறிவித்துள்ளார்கள். இவ்வித நடைமுறைகளுக்கு எங்கள் பங்களிப்பும் அவசியமாகிறது. இதுவரை ஏற்பட்ட அழிவுகளுக்குப் பரிகாரந்தேடப் பலவித திட்டங்களைப் பல நாடுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இவைகளுடன் போரில்லாத சமுதாயமொன்றை உலகில் உருவாக்குவது அவசியமாகிறது. இவை சாத்தியமானால் இயற்கையே இன்னமும் அரைநூற்றாண்டில் இற்றைவரை ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைக்கலாம் என்பது விஞ்ஞானிகளின் தூரநோக்குக் கணிப்பாக உள்ளது. எனவே மாசகற்றும் சகல திட்டங்களுக்கும் ஆதரவு அளிப்போம்! புதியதோர் உலகினைச் சமைத்திட உதவுவோம். வணக்கம்!

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 13**

## போட்டிகள் பற்றிய உங்கள் கருத்து

அன்புடையீர்!
போட்டிகள் பற்றிய உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். உங்களது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் எதிர்காலத்தில் எமது போட்டிகளை மேலும் சிறப்பாக நடாத்த உதவும் என்பதை அறியத்தருகின்றோம். உங்கள் கருத்துக்களை நேரடியாகத் தரவிரும்பின் உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைத் தரவும். நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வோம். நன்றி.

கீழேயுள்ள விடயங்களுக்குச் சரியென நீங்கள் எண்ணும் இலக்கத்தைத் தெரிக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) போட்டிகள் பற்றி வழங்கப்பட்ட விளக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 2) போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்ட விதம: | 1 | 2 | 3 | 4 | 5 |
| 3) போட்டிகளை மதிப்பிடும் விதம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 4) போட்டிகளுக்கு வழங்கப்பட்ட கவிதை, பேச்சு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 5) பொதுவாகப் போட்டியாளர்களின் தரம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6) போட்டியில் பெற்றோரின் ஒத்துழைப்பு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 7) இப்போட்டிகளால் மாணவர்களடையும் பயன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 8) மீண்டும் பங்குபற்றவுள்ள விரும்பம் | 1 | 2 | 3 | 4 | 5 |

<u>குறிப்பு:</u> 1 – மிகக்குறைவு, 2 - குறைவு, 3 - மத்திமம், 4 - நன்று, 5 - மிகநன்று.

9) போட்டியிகளிற் காணப்பட்ட குறைகள் அல்லது முன்னேற்றக்கூடிய விடயங்கள்:
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

10) நீங்கள் போட்டிகள் பற்றி வேறு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

பெயர்: ……………………………………..

தொலைபேசி: …………………………..　　　　திகதி:………………………

(குறிப்பு: போட்டிகள் முடிந்தபின் இந்தப் படிவத்தை நிரப்பிப் போட்டி நடத்துனரிடம் கொடுக்கவும் அல்லது கீழே தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.)

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2010
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 14**

## Details for competition prizes – Tamil competitions 2010

**A) Gold medal** - தங்கப்பதக்கம் **( 10)** - Aus $300.00 per medal
1st prize winner in national competitions level

**B) Memorial Trophy / Winner's trophy ( 10 )**- Aus $175.00 per trophy & First 3 prizes
1st prize winner in any competitions at state level.

**C) First 3 prizes (23 competitions)** - Aus. $75.00 per competition
Prizes for first 3 winners of any competitions

**D) Donations for special prizes, certificates and other donations:**
**-** Your nominated amount

We honour all our donors by special mention on the prize giving ceremony souvenir.

---

## Details of your donation:

Name: ………………………………………………………….

Address: ……………………………………………………

Phone: ………………………..(H) ……………………(O) ……………………(Mobile)

Email: ……………………………………………….

Category (one of the above):…………………………………………………

Preferred name for the Prize: ………………………………………………………………….

…………………………………………………………………………………………………..

Amount: ……………………………………………….

Payment method: Cheque / Money Order / Cash

You may draw or cheque in favour of `Tamil competitions' and post it to our official address: P. O. Box 4040, Homebush, NSW 2140.

---------------------------------------- ---------------------------------------
Sponsor's signature Date